**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 97/2023 P.W. 3 /L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அறிவழகன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. சிதம்பரம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.05.2023**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச்செய்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களைத் தெரியும். என்னிடம் காட்டப்படும் **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும்.** 31.12.2022 ம்தேதி காலை 05.00 மணி அளவில் நானும் என்னுடைய நண்பர் ஜெகதீஸ் என்பவரும் வேலைக்காக மண்டைக்காடு அருகே சென்றுக்கொண்டிருந்த போது அப்போது வெட்டுமடை இசக்கியம்மன் கோவில் முன்பாக போலீசார் வாகன சோதனை செய்துக்கொண்டிருந்தார்கள்.

2. அப்போது பல்சர் கறுப்பு கலர் இருசக்கர வாகனத்தில் ஆஜர் குற்றம் சாட்டப்பட்டநபர்கள் இருவரும் வந்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் கை காட்டி நிறுத்தியும் நிறுத்தாமல் திரும்ப ஓட முயன்றவரை போலீசார் ஓடிச் சென்று நிறுத்தி விசாரணைச் செய்த போது அதன் பிறகு போலீசார்விசாரணை செய்ததில் ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இருவரையும் விசாரித்தார்கள். அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். என் முன்னால் கொடுத்தார்கள் அதில் நான் அவர்கள் முன்னிலையில் கையொப்பம் செய்தேன்.

3. ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட 2 ம் நபர் கையிலிருந்து 25 பவுன் நகையும், ஆஜர் செய்தார். அதன்பின்பு ஆரல்வாய்மொழியில் உள்ள பைனான்ஸ் கடைக்கு ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் போலீசாருடன் என்னையும் அழைத்துச் சென்றார்கள். அங்கும் சில நகைகளையும் அடையாளம் காட்டி எடுத்துக்கொடுத்தார்கள். அதையும் போலீசார் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார்கள். அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் .**

1. நான் கொத்தனார் வேலைச்செய்து வருகிறேன். எனக்கு விவசாயம் செய்வதற்கு

நிலம் எதுவும் இல்லை. நான் வீட்டிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 04.30 மணிக்கு எழும்பினேன். கிளம்புவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் 04.45 மணிக்கு கிளம்பிவிட்டேன். இரும்பிலி ஜங்சனில் இருந்து எனது வீடு எவ்வளவு தூரம் என்றால் பக்கம் தான். காவல்நிலையம் எவ்வளவு துரம் என்றால் ஒன்றரை கி.மீ தொலைவு உள்ளது. நான் இரும்பிலி ஜங்சனில் இருந்து காவல்நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றேன். மேற்படி இருசக்கர வாகனம் யாருடையது என்றால் எனது நண்பர் ஜெகதீஸ் உடையது. மேற்படி வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்றால் ஜெகதீஸ் தான் ஓட்டி வந்தார்.

2. நான் சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொன்ன இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எத்தனை கி.மீ தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். நாங்கள் எத்தனை மணிக்கு கோவில் அருகே சென்றோம் என்றால் 05.00 மணிக்கு சென்றுவிட்டோம். மேற்படி கோவில் அருகில் நாங்கள் எதற்காக நின்றோம் என்றால் போலீசார் நின்றுக்கொண்டிருந்தார்கள், அதனால் நின்று சென்றோம்.

3. மேற்படி கோவிவில் இருந்து மண்டைக்காடு பகவதியம்மன் கோவில் எத்தனை கி.மீ தொலைவு இருக்கும் என்றால் கால் கி.மீ தொலைவு இருக்கும். போலீசார் என்னை விசாரித்ததால் நாங்கள் மண்டைக்காடு கோவில் தாண்டி செல்லவில்லை. அவ்வாறு நான் மண்டைக்காடு பகவதியம்மன் கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்பி வந்ததாக சொல்லப்பட்டிருந்தால் அது - தவறு. **மேற்படி கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி சாட்சியின் காவல்துறை சமர்ப்பித்த வாக்குமூலத்தை கொடுத்து படிக்க சொல்லி கேட்கிறார். அதில் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து மேற்படி சாட்சி மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் சரியல்ல என்றும் தான் சொன்னது தான் சரி என்று கூறுகிறார்.**

**4.** எத்தனை போலீசார் சம்பவயிடத்தில் நின்றார்கள் என்றால் 4, 5 போலீசார் நின்றார்கள். அவர்கள் பெயர்கள் தெரியுமா என்றால் யார் பெயரும் தெரியாது. மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் பெயர்கள் யார் எனக்கு சொன்னார்கள் என்றால் போலீசார் தான் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எந்தபெயரையும் சொல்லவில்லை.

5. போலீசார் என்னிடம் எழுதப்பட்ட தாளில் கையொப்பம் பெற்றார்களா என்றால் - ஆம். என்னிடம் கையால் எழுதப்பட்ட தாளில் தான் கையொப்பம் பெற்றார்கள். அதனை ஜெராக்ஸ் எடுத்தும் அதிலும் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். ஜெராக்ஸ் எடுத்தார்கள். லேப்டாப்பில் அடித்தார்கள். அதையும் ஜெராக்ஸ் எடுத்து கையொப்பம் பெற்றார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்லப்படும் இடத்தில் ஜெராக்ஸ் கடை எதுவும் திறந்திருந்ததா என்றும் போலீசார் ஜெராக்ஸ் எடுத்தார்களா

என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. அந்தயிடத்தில் ஜெராக்ஸ் கடை எதுவும் இருந்ததா என்றால் அவர்கள் மண்டைக்காட்டிற்கு போய் எடுத்திருக்கலாம். நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் பிரிண்டர் எதுவும் கொண்டு வந்திருந்தார்களா என்றால் எனக்குத் தெரியாது.

6. நான் சொல்வது போல் எந்த நேரத்திலும் எந்தயிடத்திலும் வைத்து ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றாலும், ஒரு சமானியனின் புரிதலுக்கு கூட எட்டாத விஷயங்களை அதாவது 05.00 மணிக்கு ஜெரா'க்ஸ் கடை திறந்திருந்ததாகவும் ஜெராக்ஸ் எடுத்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் - சரியல்ல.

7.மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் நேரத்தில் பிரிண்டரையோ அதை பிரிண்ட் எடுத்ததாகவோ நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

8. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்லப்படும் தினத்தன்று நானும் எனது நண்பர் ஜெகதீஸ்ம் எத்தனை தாள்களில் கையொப்பம் செய்தோம் என்றால் கையால் எழுதப்பட்ட பேப்பரில் ஒன்றும் ஜெராக்ஸ் எடுத்த பேப்பரில் ஒன்றும் அதன் பிறகு ஆரல்வாய்மொழியில் கையால் எழுதப்பட்ட பேப்பரில் என மொத்தம் 3 கையொப்பம் செய்தோம். வேறு கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கையொப்பம் செய்யப்பட்டதாக சொல்லியிருந்தால் அது தவறாகும்.

9. எனது நண்பர் அ.சா3 ஜெகதீஸ் காவல்நிலையத்திற்கு பரிச்சயமானவர் என்பதால் அவரின் நண்பர் என்ற முறையில் நானும் அடிக்கடி காவல்நிலையம் செல்வேன் என்றால் - இல்லை. நான் காவல் நிலையம் சென்ற பழக்கம் உண்டா என்றால் - ஆம். கோவில் விஷேசங்களுக்கு எல்லாம் செல்லும் பழக்கம் உண்டு.

10. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் தினத்தன்று நானும் அ.சா3 ஜெகதீஸ்ம் நடந்து சென்றதாக சாட்சியம் எதுவும் சொல்லப்பட்டிருந்தால் அது தவறு. நாங்கள் பைக்கில் தான்சென்றோம். மேற்படி எனது நண்பர் அ.சா3 ஜெகதீஸ் தான் என்னுடன் ஆரல்வாய்மொழிக்கு வரவில்லை என்று சொல்லியிருந்தால் அது - தவறு.

11. காவல்துறையினர் நகையின் அளவீட்டை பொறுத்து கைப்பற்றப்பட்ட இடத்தில் அளவீடு எதுவும் செய்தார்களா என்றால – இல்லை. பின் எவ்வாறு நான் அளவீடு பற்றி சொல்கிறேன் என்றால் போலீசார் பேசிக்கொண்டார்கள். அவர்கள் பேசிக்கொண்டதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

12. அ.சா3 ஜெகதீஸ் தனது சாட்சியத்தில் வேறு எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சொல்லியிருந்தால் அது - தவறு. நான் போலீசாருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவன் என்றாலும் காவல்துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் - சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.